## சுருக்கம்

பெயரிடல் – ஒசூர் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு, "கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம்" எனவும் பேருந்து நிலையத்திற்குள் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, "பேரறிஞர் அண்ணா வணிக வளாகம்" எனவும் பெயர் சூட்ட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண் 135 நாள் 15.7. 2010

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 33159/2010/எம்.1, நாள் 9.7.2010.

-----

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஒசூர் நகராட்சியில், பேருந்து நிலையத்தினை ரூ. 689.79/– இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்ய, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி ஒசூர் நகராட்சியில் பேருந்து நிலைய பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது பணிகள் முடிவடைந்துள்ளதாக சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தெரிவித்துள்ளதாகவும், ஒசூர் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு ஏற்கனவே அரசாணை (நிலை) எண். 328, ஊரக வளர்ச்சி (சி3) துறை, நாள் 18.4.1990–ல் ஆணையிட்டதற்கிணங்க, அமரர் அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம் என பெயர் சூட்டப்பட்டது என்றும், தற்போது சட்டமன்ற உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர், பெரும்பான்மையான நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கையினை ஏற்று, கே. அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம் என பெயர் சூட்ட, ஒசூர் நகர்மன்ற தீர்மான எண்.1955, நாள் 8.7.2010–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இதே போன்று புதிய பேருந்து நிலையத்திற்குள் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு, பேரறிஞர் அண்ணா வணிக வளாகம் என பெயர் சூட்ட நகர்மன்றத் தீர்மான எண்.1956, நாள் 8.7.2010–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், ஒசூர் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு, ஏற்கனவே அரசாணை (நிலை) எண். 328, ஊரக வளர்ச்சி (சி3) துறை, நாள் 18.4.1990–ல் அமரர் அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம் என பெயர் சூட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அதனை கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம் என பெயர்மாற்றம் செய்ய நகராட்சி ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. எனவே, ஒசூர் நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்திற்கு, கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம் எனவும், பேருந்து நிலையத்திற்குள் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு பேரறிஞர் அண்ணா வணிக வளாகம் என பெயர் வைக்கவும் அனுமதி கோரும் ஓசூர் நகராட்சி ஆணையரின் முன்மொழிவினை பரிந்துரை செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசிற்கு அனுப்பியுள்ளார்.

4.மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, ஓசூர் நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு, "கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம்'' எனவும், பேருந்து நிலையத்திற்குள் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு" பேரறிஞர் அண்ணா வணிக வளாகம்" எனவும் பெயர் சூட்ட ஓசூர் நகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி.
நகராட்சி ஆணையர், ஓசூர் நகராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.